(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.336/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.1 (LW.1 )

| | | |
|---|---|---|
| Name | : | இஸ்ரவேல் |
| Father's/Husband Name | : | கந்தசாமி |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | வாட்ச்மேன் |
| Age | : | 70 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **15.06.2026.**

**முதல் விசாரணை:-**

1) நான் வாலரைகேட்டில் உள்ள ஹோட்டலில் வேலைசெய்துவருகிறேன். கடந்த 21.02.2025-ம் தேதி காலை சுமார் 7.45 மணியளவில் நான் அண்ணாசிலையிலிருந்து திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையம் செல்வதற்காக நடந்து சென்றுகொண்டிருந்தபோது, அப்போது தெற்கு பக்கத்திலிருந்து வந்த அரசுப்பேருந்து குறுக்காக (சங்ககிரி வழியாக செல்லவேண்டிய அரசுப்பேருந்து) திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையத்திற்கு வந்தபோது என் மீது மோதிவிட்டது. அதில் எனக்கு கால் பாதத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. இந்த விபத்திற்கு அரசுப்பேருந்தின் ஓட்டுநர் சங்ககிரி வழியாக செல்லவேண்டிய பேருந்து குறுக்காக திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையத்தின் வழியாக

வந்தது தான் காரணம் ஆகும். விபத்து ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் தெரியும். அந்த நபர் நீதிமன்றத்திற்கு வெளியே உள்ளார். தற்போது நீதிமன்றத்திற்கு உள்ளே இல்லை. பின்னர் அங்கிருந்தவர்கள் எனது மகளுக்கு போன் செய்த வரவழைத்தார்கள். எனது மகள் வந்து என்னை விசாகன் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். நான் விசாகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். அந்த புகார்வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய நபர் என்றால் சரியல்ல. அவர் வெளியே உள்ளார். எனக்கு கண்பார்வை குறைபாடு உள்ளது என்றால் சரிதான். நான் கண் அறுவை சிகிச்சை செய்துகொண்டேன். நான் சம்பவத்தின்போது ஆஜர் எதிரியை பார்த்துவிட்டு தற்போது எனக்கு தெரிந்த காரணங்களுக்காக விபத்தை ஏற்படுத்திய நபர் ஆஜர் எதிரி இல்லை என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் வேலை செய்யும் இடத்திலிருந்து திருச்செங்கோடு டவுனுக்கு வரவேண்டுமென்றால் தெற்கிலிருந்து வடக்காக சாலையில் வந்து மேற்குபுறமாக கடந்து வரவேண்டும் என்றால் சரிதான். மீண்டும் பேருந்து நிலையம் செல்லவேண்டும் என்றால் சாலையை கடந்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். போலீசாரிடம் நான் புகார் அளித்தபோது பஸ் நெம்பர் சொன்னேனா என்றால் இல்லை. நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும்போது அந்த ரோட்டில் சம்பவம் நடந்ததாக புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

சம்பவம் 7.00 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளேன். விசாகன் மருத்துவமனைக்கு எவ்வளவு நேரத்தில் சென்றேன் என்றால் சம்பவம் நடந்து 1/2 மணி நேரத்தில் சென்றுவிட்டேன். காலை 8.00 மணிக்கு மருத்துவர் எனக்கு சிகிச்சையளித்தபோது நான் நடந்த விபரத்தை சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:- இல்லை

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.15 19:09:54 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.336/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.2 (LW.3 )

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணன் |
| Father's/Husband Name | : | ராமசாமி |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | சலவைத்தொழில் |
| Age | : | 55 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **15.06.2026.**

**முதல் விசாரணை:–**

1) கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு நானும் கவுன்சிலரும் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் அண்ணாசிலை வழியாக வந்துகொண்டிருந்தபோது, அங்கு கூட்டமாக இருந்தது . அருகில் சென்று பார்த்தபோது அரசுப்பேருந்து ஒன்று குறுக்காகநின்றுகொண்டிருந்தது. ஒருநபர் அருகே அடிபட்டு கீழே விழுந்துகிடந்தார். அவர் எனது பக்கத்து வீட்டில் குடியிருப்பவர் ஆவார். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. கூட்டமாக இருந்ததால் தான் நான் அருகில் சென்று பார்த்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 21.02.2025-ம் தேதி காலை சுமார் 7.45 மணியளவில் எனது சொந்த வேலை காரணமாக இருசக்கர வாகனத்தில் திருச்செங்கோடு அண்ணாசிலை அருகே சென்றுகொண்டிருந்தபோது இஸ்ரேல் என்பவர் வீட்டிற்கு செல்வதற்காக வேலூர் to திருச்செங்கோடு ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றபோது இறையமங்கலத்திலிருந்து திருச்செங்கோடு புதிய பேருந்து நிலையம் செல்வதற்காக வந்த அரசுப்பேருந்து TN 30 N 0772 பேருந்தின் ஓட்டுநர் எவ்வித சிக்னலும் கை அசைவும் செய்யாமல் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்துஅண்ணாசிலை வலதுபுறமாக ஒருவழிப்பாதை வழியாக திரும்பி சென்றதால் ரோட்டின் ஓரமாக சென்றுகொண்டிருந்தவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதின் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நானும் எனது ஊரைச்சேர்ந்த கவுன்சிலர் சேகர் என்பவரும் ஒன்றாகத்தான் சென்றோம் என்றால் சரிதான். நான் பார்த்ததை தான் அவரும் பார்த்தார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:-** இல்லை

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.15 19:10:04 +0530